# இயல் 6.3 - விகிதம் மற்றும் விகித சமம்

பயிற்சி எண் :: 6.3.3.4.E

விகிதம் - சமான விகிதங்கள் -
த.நா.அ.பு - நினைவில் கொள்க 3.4.1-9

## விகிதம் - சமான விகிதங்கள் - த.நா.அ.பு - நினைவில் கொள்க 3.4.1-9

☞ **சரியான விடையை தேர்வு செய்க.**

1. இரண்டு அளவுகளை வகுத்தலின் மூலம் ஒப்பிடுவது விகிதம் ஆகும்.

   a) சரி ✓ b) தவறு Eg. $4 : 2 \Rightarrow \frac{4}{2} \Rightarrow 2 : 1$

2. பொதுவாக விகிதங்கள் பின்னங்களாக எளிய வடிவத்தில் எழுதப்படும்.

   a) தவறு b) சரி ✓ Eg. $8 : 4 \Rightarrow \frac{8}{4}$

3. விகிதத்திற்கு அலகு இல்லை.

   a) சரி ✓ b) தவறு Eg. 5 : 2 என்பது ஒரு விகிதம். இதற்கு மீட்டர், செ.மீ, கிராம், கிலோ கிராம் போன்ற எந்த அலகும் இல்லை.

4. விகிதத்தின் இரண்டு அளவுகளும் ஒரே அலகினைப் பெற்றிருக்கும்.

   a) தவறு b) சரி ✓ Eg. 4-ன் மதிப்பு செ.மீ ஆக இருப்பின், 2-ன் மதிப்பும் செ.மீ ஆக இருக்க வேண்டும்.

5. விகிதத்தின் உறுப்புகளின் வரிசையை மாற்ற முடியாது.

   a) சரி ✓ b) தவறு Eg. 8 : 3 என்பதை 3 : 8 என எழுதினால் விகிதத்தின் மதிப்பு மாறிவிடும். எனவே, உறுப்புகளின் வரிசையை மாற்றக்கூடாது.

6. சமான விகிதத்தைப் பெற விகிதத்தின் பகுதியையும் தொகுதியையும் ஒரே எண்ணால் பெருக்க வேண்டும்.

   a) தவறு b) சரி ✓ Eg.

   3 : 2 விகிதம் $\Rightarrow \frac{3}{2}$

   1-வது சமான பின்னம் $\Rightarrow \frac{3}{2} \times \frac{2}{2} = \frac{6}{4}$


   2-வது சமான பின்னம் $\Rightarrow \frac{3}{2} \times \frac{3}{3} = \frac{9}{6}$

7. இரண்டு விகிதங்கள் சமம் எனில், அவை விகித சமம் எனப்படும்.

   a) சரி ✓ b) தவறு Eg. 2 : 1 :: 4 : 2 இவை விகித சமம் ஆகும்.

8. விகிதசம விதிப்படி, கோடி உறுப்புக்களின் பெருக்கற்பலனானது, நடுஉறுப்புகளின் பெருக்கற்பலனுக்குச் சமம்.

   a) தவறு b) சரி ✓ Eg.




   $2 \times 2 = 4$

   $1 \times 4 = 4$

   விகித சமம்

9. ஓரலகு முறை என்பது ஓர் அலகின் மதிப்பினைக் கண்டறிந்து, தேவைப்படும் அலகின் எண்ணிக்கையின் மதிப்பினைக் கண்டறிதல் ஆகும்.

   a) சரி ✓ b) தவறு Eg. வினா : 3 புத்தகங்களின் விலை ₹60 எனில் 5 புத்தகங்களின் விலை என்ன?
   ஒரு புத்தகத்தின் விலை = 60 ÷ 3 = 20
   எனில், 5 புத்தகங்களின் விலை = 20 × 5 = ₹100


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 8th March, 2022 :: 04:56 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.